A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 80 / 2022**

திரு மு. மாரியப்பன்,
த/பெ. முருகன முதலியார் @ முருகப்ப முதலியார்,
க.எண். 9/195, ராதா கிருஷ்ண வீதி,
எஸ், என். ஜி நகர் முதல் வீதி,
அம்மாபாளையம், அனுப்பர்பாளையம் அஞ்சல்,
திருப்பூர் – 641 652.

………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு M. சிவக்குமார்)

எதிர்

செயற்பொறியாளர்/ இ&ப/அவிநாசி,
திருப்பூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மின்வாரிய அலுவலக வளாகம், மங்களம் ரோடு,
அவிநாசி – 641 654.

...... எதிர்மனுதாரர்
(திரு.C. செந்தில்குமார், உதவி செயற்பொறியாளர்/ அனுப்பர்பாளையம்)

**மனு பெறப்பட்ட நாள்: 12-09-2022**

**கேட்புரை நாள்: 15-12-2022**

**ஆணை நாள்: 10-01-2023**

12.09.2022 அன்று பெறப்பட்ட திரு மு. மாரியப்பன், த/பெ. முருகன முதலியார் @ முருகப்ப முதலியார், க.எண். 9/195, ராதா கிருஷ்ண வீதி, அம்மாபாளையம், அனுப்பர்பாளையம் அஞ்சல் திருப்பூர் – 641 652 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 80/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 15.12.2022 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள

வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## <u>ஆணை</u>

### 1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>

மின் இணைப்பு எண் 03–169–011–964–இல் பெயர் மாற்றம் செய்ததை ரத்து செய்யுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 <u>வழக்கின் சுருக்கம்:</u>

2.1 மின் இணைப்பு எண் 03–169–011–964–ஐ திரு பழனியப்பன் பெயரில் பெயர் மாற்றம் செய்ததை ரத்து செய்யக் கோரி மேல்முறையீட்டாளர் எதிர்மனுதாரரிடம் விண்ணப்பித்துள்ளார்.

2.2 திரு பழனியப்பன் அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளன என எதிர்மனுதாரர் தெரிவித்ததால் மேல்முறையீட்டாளர் திருப்பூர் மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தை 16.12.2021 அன்று அணுகியுள்ளார்.

2.3 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருப்பூர் மின்பகிர்மான வட்டம், 09.05.2022 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

### 3.0 <u>மன்றத்தின் தீர்வு:</u>

திருப்பூர் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 09.05.2022 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"முடிவுரை:*
> *திரு.M.மாரியப்பன், திருப்பூர் அவர்களுக்கு அறிவிப்பது யாதெனில் தாங்கள் புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள மின் இணைப்பினை பெயர் மாற்றம் செய்ய இதுநாள்வரை எதிர்மனுதாரரது அலுவலகத்தில் விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. மேலும் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தில் தங்களுக்குள்ள உரிமையை உறுதிப்படுத்தும் வருவாய் துறை ஆவணங்களுடன் ஆட்சேபணை தெரிவிக்கும் பட்சத்தில், தங்களது*

*ஆட்சேபணை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்ற தகவல் தங்களுக்கு தெரிவிக்கப்பட்டு தங்களது மனுவினை மன்றம் முடித்து வைக்கிறது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 15.12.2022 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு M. சிவக்குமார் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் திரு.C. செந்தில்குமார், உதவி செயற்பொறியாளர்/ அனுப்பர்பாளையம், திருப்பூர் மின் பகிர்மான வட்டம் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

## 5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர், மூத்த குடிமகன் ஆகிய தான், மேற்கண்ட முகவரியில் நிரந்தரமாக வசித்து வருவதாகவும், கடந்த 16.12.2021–ம் தேதியன்று, வாரிசுகளை மறைத்து, போலி பட்டா உருவாக்கி, அதன் மூலம் பெற்ற மின் இணைப்பை ரத்து செய்து, சொத்தின் உரிமையாளர் பெயரில் மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்யக் கோரி ஓர் புகார் மனுவினை, மின் குறைதீர்க்கும் மன்றம், திருப்பூர்–க்கு தாக்கல் செய்து மேற்படி மனு கடந்த 17.12.2021–ம் தேதியன்று, சார்பு செய்யப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 மின் இணைப்பு எண். 03–169–011–964–க்குரிய சொத்து, கடந்த 30.01.1994–ம் தேதியன்று, திரு. பழனியப்ப முதலியார் மகன், திரு. முருக முதலியார் @ முருகப்ப முதலியார் @ முருகன முதலியார் அவர்களின் பெயரில் வழங்கப்பட்ட நத்தம் பட்டாவின் அடிப்படையில் மேற்படி சொத்து மேற்படி நபருக்கு சொந்தமானது / பாத்தியப்பட்டதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். மேற்படி நபரின் காலத்திற்கு பின் சட்டப்படியான வாரிசுதாரர்கள் 1. அருணாச்சலம், 2.பழனியப்பன், 3.சென்னியப்பன், 4.மாரியப்பன் (மனுதாரர்), 5.ராமசாமி மற்றும் 6.அங்கப்பன் ஆகியோர் ஆவார்கள் என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 மேற்படி உண்மை விவரங்களை மறைத்து, மேற்படி திரு. முருகன முதலியாரின் இதர வாரிசுகளுக்கு சொத்து போய்ச் சேரக்கூடாது, சொத்தை அபகரிக்க வேண்டும் என்று திட்டமிட்டு, மேற்படி நத்தம் பட்டாவில், பொய் / போலி ஆவணங்களை தாக்கல் செய்து, மேற்படி வாரிசுகளில் ஒருவரான, திரு.பழனியப்பன் அவர்களின் மகன், திரு. ப.வெங்கடாசலம் அவர்கள், கடந்த 2019–ம் வருடம், பட்டாவில் பெயர் மாற்றம் செய்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 அதனை மூல ஆவணமாகக் கொண்டு, கடந்த 15.06.2019–ஆம் தேதியன்று, மேற்படி திரு. ப. வெங்கடாசலம் & அவரது வகையறாக்கள், ஓர் தான செட்டில்மென்ட் ஆவணம் எண். 8199/2019–யினை பதிவு செய்துள்ளதாகவும் அதற்கு பின்னிட்டு, கடந்த 04.12.2019 தேதியன்று, திரு. காளியப்பன் மகன் சுப்பிரமணியம் என்பவருக்கு, ஓர் கிரைய ஆவணம் எண்.17603/2019 கொடுத்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 திரு. முருகப்ப முதலியார் மகன் பழனியப்ப முதலியார் என்பவர் அரசு அதிகாரிகளிடம் பொய் வாக்குமூலம் அளித்து, பொய்யான / போலியான ஓர் விண்ணப்பத்தினை தாக்கல் செய்து, அதன் அடிப்படையில் அரசு அதிகாரிகளும் கடமையில் இருந்து தவறி அதிகார துஷ்பிரயோகம் செய்து அரசு ஆவணமான மேற்படி பட்டாவில் எவ்வித ஆவண ஆதாரங்கள் / மூல ஆவணங்கள் இன்றி சட்டப்படியான வாரிசுகளிடம் எவ்வித விசாரணையும் மேற்கொள்ளாமல் திரு. முருகப்ப முதலியார் மகன் பழனியப்ப முதலியார் என்பவர் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 கடந்த 04.01.2022–ம் தேதியன்று உதவி மின் பொறியாளர், அனுப்பர்பாளையம் அவர்கள், மேற்படி பொருள் தொடர்பாக, பெயர் மாற்றம் கோரி, எந்தவொரு விண்ணப்பமும் கிடைக்கப் பெறவில்லை என பதில் வழங்கியுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 கடந்த 28.04.2022–ம் தேதியிட்டு, மன்ற தலைவர், கடந்த 05.05.2022–ம் தேதியன்று, மேற்படி பொருள் தொடர்பாக நடைபெற்ற விசாரணைக்கு அழைப்பாணை சார்பு செய்யப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். அந்த விசாரணையில், தன்னுடைய மகன், சிவக்குமார் கலந்து கொண்டு தனது தரப்பு வாதங்களை, நேரில் எடுத்துரைத்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 கடந்த 09.05.2022–ம் தேதியன்று, மேற்படி பொருள் தொடர்பாக, மன்ற தலைவர், ஓர் உத்தரவு பிறப்பித்துள்ளார். அந்த உத்தரவு, கீழ்க்கண்ட வாதங்களின் அடிப்படையில், ஏற்புடையது அல்ல என்பதால், நாளது தேதியில், மாண்பமை சமூகம் அவர்களுக்கு, இம் மேல்முறையீட்டு மனு, பணிந்து தாக்கல் செய்யப்படுவதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 மேற்படி உத்தரவில், எதிர்மனுதாரரின் பதிலுரையில் மின் இணைப்பு எண். 03–169–011–964 ஆனது, கடந்த 10.12.1998–ம் தேதியன்று, திரு முருகன முதலியார் மகன், திரு பழனியப்ப முதலியார் பெயரில் வழங்கப்பட்டது என எதிர்மனுதாரர் வாக்குமூலம் அளித்துள்ளார். ஆனால், கடந்த 26.07.1994–ம் தேதியன்று, திரு முருகன முதலியார் மகன், பழனியப்ப முதலியார் காலமாகிவிட்ட நிலையில், கடந்த 10.12.1998–ம் தேதியன்று, காலஞ்சென்ற திரு முருகன முதலியார் மகன், திரு பழனியப்ப முதலியார்–க்கு, எந்த மூல ஆவணங்களின் அடிப்படையில், மேற்படி மின் இணைப்பு வழங்கப்பட்டது? என எதிர்மனுதாரரிடம், மன்ற தலைவர் விசாரணை செய்யவில்லை / மூல ஆவணங்களை சரி பார்க்கவில்லை என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.10 எதிர்மனுதாரரின் வாக்குமூலத்தின் அடிப்படையில், "காலஞ்சென்ற / இறந்த ஒருவரின் பெயரில் எவ்வாறு மின் இணைப்பு கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது?" என எதிர்மனுதாரரிடம், மன்ற தலைவர் விசாரணை செய்யவில்லை / மூல ஆவணங்களை சரி பார்க்கவில்லை என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

மேற்படி மனுவில் குறிப்பிட்டுள்ள மின் இணைப்பினை பெயர் மாற்றம் செய்யக் கோரி நாளது தேதிவரை எந்தவொரு விண்ணப்பமும் வரவில்லை எனவும், உரிய வருவாய்த்துறை ஆவணங்களுடன் ஆட்சேபணை தெரிவிக்கும் பட்சத்தில், ஆட்சேபணை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்" என்றும் உத்தரவிடப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.11 கடந்த 24.11.2021–ம் தேதியன்று, மேற்படி பொருள் தொடர்பாக, திரு. வருவாய் கோட்டாட்சியர், திருப்பூர் அவர்கள், வட்டாட்சியரிடம் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், நாளது தேதிவரை, எந்தவொரு அறிக்கையும் தாக்கல் செய்யவில்லை. வருவாய் கோட்டாட்சியர், மேற்படி பொருள் தொடர்பாக, எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.12 ஆகவே, அந்த பொருள் தொடர்பாக, வட்டாட்சியரிடம் அறிக்கை & வருவாய் கோட்டாட்சியரிடம் பட்டாவின் உண்மைத் / மெய்த்தன்மை சான்று கேட்டுப் பெற்று, அதன் அடிப்படையில், இம் மேல்முறையீட்டு மனுவின் மீது, தகுந்த உத்தரவு பிறப்பிக்குமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.13 இந்திய அரசியல் சாசனம் 1950–ன் கோட்பாடு 21–ன் படி, "சட்டப்படியான விசாரணை முறைப்படி" இம் மேல்முறையீட்டு மனுவின் மீது விசாரணை செய்யுமாறு மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.14 மேலும், மேற்படி மனுவில் சொல்லப்பட்டுள்ள வாதங்கள் / தீர்ப்புகளின் அடிப்படையில், மன்ற தலைவர், சட்டப்படியான விசாரணை மேற்கொண்டால், எதிர்மனுதாரர் மீது, உரிய சட்ட & துறை ரீதியான நடவடிக்கை எடுக்க நேரிடும் என குற்றம் கருதி, உள்நோக்கத்துடன் உத்தரவை பிறப்பித்துள்ளார் என்பது, மேல்முறையீட்டாளர் / மூத்த குடிமகன் ஆகிய தனது தரப்பு வாதம் ஆகும் என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.15 ஆகவே, இம்மேதகு சமூகம் அவர்கள், மேற்படி வாதங்களின் அடிப்படையில், "இந்திய அரசியல் சாசனம் 1950"ன் கோட்பாடு 21–ன் படி, சட்டப்படியான விசாரணை செய்ய வேண்டி, இம் மேல்முறையீட்டு மனுவினை கருணையுடன் பரிசீலனை செய்து ஏற்று, கடந்த 09.05.2022–ம் தேதியிட்டு, மன்ற தலைவர் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்ய கோரி மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.16 கடந்த 16.12.2021–ம் தேதியிட்டு, மன்றத்தில் தாக்கல் செய்த புகார் மனுவின் மீது, மீள் விசாரணை செய்ய வேண்டியும், போலியான / பொய்யான பட்டாவை தாக்கல் செய்து, மின் இணைப்பு எண். 03–169–011–964 வழங்கப்பட்டுள்ளது என விசாரணையில் கண்டறிந்தால், மேற்படி பொருள் குறித்த குற்றச்சாட்டில் தொடர்புடைய அனைவர் மீதும், உரிய சட்ட & துறை ரீதியான நடவடிக்கை எடுக்க / பரிந்துரை செய்யக் கோரியும் மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்:</u>

6.1 அவிநாசி கோட்டம் அனுப்பர்பாளையம் உபகோட்டம் கிராமியம் அனுப்பர்பாளையம் பிரிவு அலுவலகத்தை சேர்ந்த மின் இணைப்பு எண்–169–011–964 என்ற வீட்டு மின் இணைப்பானது முருகப்பன் மகன் பழனியப்பன் பெயரில் கடந்த 10.12.1998 அன்று திரு பழனியப்பன் அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் வழங்கப்பட்டு உள்ளது தெரிய வருகிறதாக எதிர்மனுதமாரர் தெரிவித்துள்ளார்.

6.2 திரு.மு.பழனியப்பன் த/பெ.முருகப்பன் அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டு அதன் அடிப்படையிலேயே வீட்டு மின் இணைப்பு எண்– 169–011–964 வாரிய விதிமுறைகளின்படி 10.12.1998 அன்று வழங்கப்பட்டுள்ளதாக அலுவலக ஆவணங்கள் வாயிலாக தெரிய வருவதாக எதிர்மனுதமாரர் தெரிவித்துள்ளார்.

6.3 தற்பொழுது மின் இணைப்பு எண்–1639–011–964 என்ற வீட்டு மின் இணைப்பை திரு.கே.சுப்பிரமணியம் த/பெ.காளியப்பன் அவர்கள் உரிய ஆவணங்களுடன் இணையதள வாயிலாக பெயர் மாற்றம் வேண்டி பதிவு செய்து பெயர் மாற்றம் செய்ய உரிய கட்டணத்தைத்தொகையை செலுத்தி தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய வேண்டி சமர்ப்பித்த விண்ணப்பம் மற்றும் ஆவணங்களை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் கடந்த 29.08.2022 அன்று திரு.பழனியப்பன் அவர்களின் பெயரில் இருந்து திரு.கே.சுப்பிரமணியம் த/பெ.காளியப்பன் அவர்களின் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதமாரர் தெரிவித்துள்ளார்.

6.4 07.05. 2022–தேதியிட்ட மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற தீர்ப்பில் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தில் திரு.மு.மாரியப்பன் த/பெ.முருகன் முதலியார் @ முருகப்ப முதலியார் அவர்களிடம் தங்களின் உரிமையை உறுதிப்படுத்தும் வருவாய்துறை ஆவணங்களுடன் ஆட்சேபனை தெரிவிக்கும்பட்சத்தில் தங்களது ஆட்சேபனை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்ற தகவல் திரு.மு.மாரியப்பன் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் இதுநாள் வரை திரு.மு.மாரியப்பன் அவர்களால் ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கப்படவில்லை எனவும் எதிர்மனுதமாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மேலும் மின் இணைப்பு எண். 169–011–964 தொடர்பாக திரு.மு.மாரியப்பன் தகவல் அறியும் உரிமைச்சட்ட கடித எண்–MM–RT1–09/2022–DT– 09.09.2022–ல் கண்ட தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவிற்கான தகவல்கள் அனைத்தும் கூடுதல் தலைமைப் பொறியாளர், திருப்பூர் மின் பகிர்மான வட்டம், திருப்பூர் அவர்களால் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதமாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் திரு மு. மாரியப்பன், த/பெ. முருகன முதலியார் @ முருகப்ப முதலியார் அவர்கள் க.எண்.9/195, ராதாகிருஷ்ண வீதி, எஸ்.என்.ஜி. நகர் முதல் வீதி, அம்மாபாளையம், அனுப்பர்பாளையம் அஞ்சல், திருப்பூர் – 641 652 என்ற முகவரியில் வசித்து வருவதாகவும், திருப்பூர் மாவட்டம், ராக்கியாபாளையம் கிராமம், திருமுருகண்பூண்டி பேரூராட்சி, அம்மாபாளையம் பழைய கிராம நத்தம் எண் 567/1 பா, புதிய கிராம நத்தம் எண் 567/9 பட்டா எண் 866 ஆனது, இப்புகார் மனுவின் சொத்து எனவும் தெரிய வருகிறது.

7.3 மேற்படி சொத்து ஆதியில் திரு முருகன முதலியார் அவர்களுக்கு சொந்தமானது எனவும், திரு முருகன முதலியார் காலத்திற்கு பின்னிட்டு திரு. அருணாச்சலம், திரு. பழனியப்பன், திரு. சென்னியப்பன், திரு. மாரியப்பன், திரு. ராமசாமி மற்றும் திரு. அங்கப்பன் ஆகியோர் வாரிசுதாரர்களாக இருந்த நிலையில் மேற்படி உண்மை விபரங்களை மறைத்து மேற்படி வாரிசுகளில் ஒருவரான திரு

பழனியப்பன் அவர்களின் மகன் திரு ப.வெங்கடாச்சலம் மற்றும் அவரது வகையறாக்கள் 15.06.2019 அன்று ஒரு தான செட்டில்மென்ட் மூலம் திரு .ப.வெங்கடாச்சலம் பெயருக்கு பதிவு செய்துள்ளதாகவும், அதற்கு பின் கடந்த 04.12.2019–ஆம் தேதியன்று திரு.காளிப்பன் மகன் சுப்பிரமணியம் என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.4 போலிபட்டா வழங்கியது குறித்து மாண்பமை தமிழ்நாடு தகவல் ஆணையம் சென்னை அவர்களிடத்தில் உரிய மனு தாக்கல் செய்து வருவாய்த் துறையின் நடவடிக்கை தற்போது நிலுவையில் உள்ளதாகவும், திரு வெங்கடாச்சலம் திரு காளியப்பன் மகன் சுப்பிரமணியம் மற்றும் அவரது வகையறாக்கள் மேற்படி சொத்திற்குரிய மின் இணைப்பை பெயர் மாற்றம் செய்ய கோரும் பட்சத்தில் சொத்துரிமையின் மெய்த்தன்மையினை உறுதிசெய்யாமல் மின்னிணைப்பினை பெயர் மாற்றம் செய்துதர வேண்டாம் என எதிர்மனுதாரரை மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

7.5 மேல்முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள மின் இணைப்பு எண் 169–011–964 ஆனது கிராமியம் அனுப்பர்பாளையம் பிரிவு அலுவலகத்திற்கு உட்பட்ட அம்மாபாளையம் பகிர்மானத்தில் திரு பழனியப்பன் பெயரில் 10.12.1998 அன்று சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களின் அடிப்படையில் வாரிய விதிமுறைபடி மின் இணைப்பு வழங்கப்பட்டதாகவும், அன்றைய சூழ்நிலையில் அவ்வாறு வழங்கப்பட்டபோது எந்தவித ஆட்சேபனையும் பெறப்படவில்லை என எதிர்மனுதமாரர் தெரிவித்துள்ளார்

7.6 மேலும் 1998–இல் மின் இணைப்பு வழங்கியது சம்பந்தமாக எதிர்மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங் களை ஆய்வு செய்த போது கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய சான்றின்படி கதவு எண் 9/30 என்ற எண்ணுள்ள வீடு மனைவரி பட்டா எண் 866 முதலியன திரு முருகப்ப முதலியார் மகன் திரு பழனியப்ப முதலியார் அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்று தெரியவருகிறது.

7.7 தற்பொழுது மின் இணைப்பு எண்–1639–011–964 என்ற வீட்டு மின் இணைப்பை திரு.கே.சுப்பிரமணியம் த/பெ.காளியப்பன் அவர்கள் உரிய ஆவணங்களுடன் இணையதள வாயிலாக பெயர் மாற்றம் வேண்டி பதிவு செய்து பெயர்

மாற்றம் செய்ய உரிய கட்டணத்தைத்தொகையை செலுத்தி தனது பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய வேண்டி சமர்ப்பித்த விண்ணப்பம் மற்றும் ஆவணங்களை ஆய்வு செய்து அதன் அடிப்படையில் கடந்த 29.08.2022 அன்று திரு.பழனியப்பன் அவர்களின் பெயரில் இருந்து திரு.கே.சுப்பிரமணியம் த/பெ.காளியப்பன் அவர்களின் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக எதிர்மனுதமாரர் தெரிவித்துள்ளார்.

7.8 ஒரு தாழ்வழுத்த மின்னிணைப்பை பெயர் மாற்றம் செய்யும்பொழுது உரிமதாரர் கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள் குறித்து அறிய நான் தமிழ்நாடு மின்வழங்கல் விதித்தொகுப்பில் கூறப்பட்டுள்ள விதி **5(7)**ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"5. Miscellaneous charges -*

*xxx xxx xxx*

*(7) Name Transfer charge*

*(i) Every application for transfer of name consequent to the death of the consumer shall be in Form (1) in Appendix to this code accompanied by :*

*(a) Legal heirship certificate from the Tahsildar concerned or proof of ownership such as local body tax receipts (latest).*

*(b) No objection certificate from other legal heirs, if any, (or) an indemnity bond in Form (3) in Appendix to this Code on non-judicial stamp paper for a value of Rs.80/- and a sworn-in affidavit and authenticated by a Notary Public or by a gazetted officer to show the status of other legal heirs.*

*(c) Fresh application with fee to be specified by the Commission and agreement form.*

*(ii) Every application for transfer of name, in other cases, shall be in Forms (1) and (2) in Appendix to this Code accompanied by*

*a) The document supporting the transfer with an undertaking in Form (4) in Appendix to this Code*

*(b) Consent letter from the consumer for the transfer of the Security Deposit 4 [if it is not included in the document supporting the transfer.*

*(c) Fresh application with fee to be specified by the Commission and agreement form.*

*Explanation: The name transfer is effected only for such services which are not under disconnection."*

7.9 மேற்கண்ட விதிகளை கூர்ந்து படிக்கும்பொழுது நாம் அறிவது ஒரு மின்இணைப்பின் பெயர் மாற்றம் ஒரு நுகர்வோர் இறந்தால் எப்படி செய்யப்படவேண்டும் என்று மின்வழங்கல் விதித்தொகுப்பின் விதி 5(7)(i)ல் விவரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு இல்லாமல் மற்ற நேர்வில் மின்இணைப்பின் பெயர்மாற்றம் எவ்வாறு செய்யப்படவேண்டும் என்பது மின்வழங்கல் விதித்தொகுபிபின் விதி 5(7)(ii)ல் விவரிக்கப்பட்டுள்ளது.

7.10 இந்த வழக்கிலுள்ள மின்இணைப்பு எண் பெயர் மாற்றம், ஒரு நுகர்வோர் இறந்தபின் செய்யப்பட்டுள்ளதாக இல்லாமல் மற்ற நேர்வில் உள்ளதால் தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணை விதி 5(7)(ii)ன் படி பெயர் மாற்றம் கோரும் விண்ணப்பதாரர்

i) The xerox copy of the sale deed or property tax or propoerty tax receipt or Metro water/Seweage connection receipt or legal heirship certificate from the Tahsildar concerned

ii) Application and agreement form

iii) An indemnty bond on Rs.80/- Non-judicial stamp paper (Applicable in the case of name transfer due to legal succession)

ஆகியவற்றை சமர்ப்பிக்கும் பட்சத்தில் மின் இணைப்பை பெயர் மாற்றம் செய்யலாம் என தெரியவருகிறது.

7.11 எனவே மேற்கூறிய மின் இணைப்பை பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பதாரர் திரு K.சுப்பிரமணியம் அவர்கள் சமர்ப்பித்த உரிய கிரைய பத்திரம் எண் R/அவிநாசி/புத்தகம்-1/17603/2019 நாள் 04.12.2019-இன் அடிப்படையிலேயே தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணை விதிகளின்ப டி எதிர்மனுதாரர் பெயர் மாற்றம் செய்துள்ளார் என்பது தெரிய வருகிறது.

7.12 இந்நிலையில் மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்ற தீர்ப்பில், புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தில் திரு.மு.மாரியப்பன் த/பெ.முருகன் முதலியார் @ முருகப்ப முதலியார் அவர்களிடம் தங்களின் உரிமையை உறுதிப்படுத்தும் வருவாய்துறை ஆவணங்களுடன் ஆட்சேபனை தெரிவிக்கும்பட்சத்தில் தங்களது ஆட்சேபனை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்ற தகவல் திரு.மு.மாரியப்பன் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால் இதுநாள் வரை

திரு.மு.மாரியப்பன் அவர்களால் உரிய வருவாய்துறை ஆவணங்களுடன் ஆட்சேபனை ஏதும் தெரிவிக்கப்படவில்லை எனவும் எதிர்மனுதமாரர் தெரிவித்துள்ளார்.

7.13 கேட்புரையின் போது மின்குறைதீர்ப்பாளர் மேல்முறையீட்டாளரிடம் தாங்கள் உரிமைகோரும் சொத்துக்கான ஆவணங்கள் /நீதிமன்ற தீர்ப்பு ஏதாவது தங்களிடம் உள்ளதா என்று வினவிய போது அதற்குண்டான செயல்பாட்டில் ஈடுபட்டு நடைமுறையில் இருப்ப தாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார். மேலும் மேல்முறையீட்டாளர் திரு முருகப்ப முதலியார் பெயரில் உள்ள ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கவில்லை.

7.14 இதன் மூலம் வாரிய விதிகளுக்கு உட்பட்டே பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. எனவே உரிய ஆவணங்களின்றி எதிர்மனுதாரர் எடுத்த நடவடிக்கைக்கு ஆட்சேபனை தெரிவிக்கும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை மனு நிராகரிக்கப்படுகிறது.

**8.0 முடிவுரை:**

8.1 பத்தி 7.0–இல் உள்ள தீர்வுகளின் அடிப்படையில் மேல் முறையீட்டாளரின் மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த முறையீட்டு மனு எண் 80/2022 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

பெறுநர்

1. திரு மு. மாரியப்பன், – BY RPAD
த/பெ. முருகன முதலியார் @ முருகப்ப முதலியார்,
க.எண். 9/195, ராதா கிருஷ்ண வீதி,
அம்மாபாளையம்,
அனுப்பர்பாளையம் அஞ்சல்,
திருப்பூர் – 641 652.

2. செயற்பொறியாளர்/ இ&ப/அவிநாசி,
திருப்பூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
மின்வாரிய அலுவலக வளாகம், மங்களம் ரோடு,
அவிநாசி – 641 654.

3. மேற்பார்வை பொறியாளர், – By Email
திருப்பூர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
19A & 19B, ஜோதிநகர்,
PN ரோடு, திருப்பூர் – 641 603.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.